# அருள் ஒளி




அன்னை சிவத்தமிழ்ச்செல்விக்கு
அகவை 82 நிறைவு
07.01.2007

நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள
அகில இலங்கை இந்துமாமன்றத்தின்
புதிய மூன்றுமாடிக் கட்டடம்.


வெளியீடு : ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்

மார்கழி மாத இதழ்

தெல்லிப்பழை
இலங்கை

மலர் 52

2006




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்னையை வாழ்த்தி வணங்குகின்றோம்.



ஈழத்தமிழர்களின் இனிய ஆன்மீக அன்னையாக விளங்கும்
அன்னை சிவத்தமிழ்ச் செல்வி கலாநிதி. தங்கம்மா அப்பாக்குட்டி
அவர்களின் அகவை 82 இன் நிறைவு குறித்து வாழ்த்துகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உ

# அருள் ஒளி

(மாதாந்த சஞ்சிகை)

ஆசிரியர்:

செஞ்சொற்செல்வர்

திரு. ஆறு. திருமுருகன் அவர்கள்

உதவி ஆசிரியர்:

சைவத்திரு கா. சிவபாலன் அவர்கள்

2006 விய வருடம் கார்த்திகை மாதம்

மலர் 52

வெளியீடு: ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை, இலங்கை. பதிவு இல, QD/74/NEWS/2006Y}


## ஆரம்பக் கல்வி அறுவடையில் இந்துவின் சாதனை

நல்லைநகர் நாவலர் பெருமான் சைவப் பாரம்பரியத்தோடு கூடிய கல்விச் சாலைகள் திறக்கப்பட வேண்டும் என விடுத்த வேண்டுதல் வீணாகவில்லை. நாவலரின் வேண்டுதலுக்கமைய உருவாகிய கல்லூரியே யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி. இக் கல்லூரியின் ஒரு பிரிவாக இயங்கிய யாழ் இந்துக் கல்லூரி தமிழ் கலவன் பாடசாலை இன்று தனித்துவம் பெற்றுள்ளது. இப் பாடசாலை யாழ் இந்துக் கல்லூரி ஆரம்பப் பாடசாலை என்ற நாமத்தோடு பிரபல்யம் பெற்று விளங்குகிறது. கடந்த ஆண்டு நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் குடாநாட்டில் முதல்தரப் பாடசாலையாக தனது பெருமையை நிலை நாட்டிக் கொண்டுள்ளது. 102 மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்றதோடு அகில இலங்கை ரீதியில் மூன்றாவது இடத்தையும் யாழ் குடாநாட்டில் முதலாவது நிலையிலும் இப் பாடசாலையைச் சேர்ந்த செல்வன் சுந்தரேசன் வித்தியாசாகர் 186 புள்ளிகள் பெற்று பெருமை தேடித் தந்துள்ளார். இந்து மக்களின் ஒப்பற்ற கல்விச் சாலையாகிய யாழ் இந்து ஆரம்பப் பாடசாலையை பாராட்டதவர்கள் இல்லை. ஆரம்ப காலத்தில் கிடுகுக் கொட்டிலாக விளங்கிய இப் பாடசாலை இன்று பெரு மாடிக் கட்டிடங்களைக் கொண்ட பாடசாலையாகக் காட்சியளிக்கிறது. சகல துறைகளிலும் பாடசாலைச் சிறார்கள் சாதனை நிலை நாட்டி வருகின்றனர்.

இப் பாடசாலையின் மகத்தான வளர்ச்சிக்கு காரணகர்த்தாவாக விளங்கியவர்கள் இங்கு பணியாற்றிய அதிபர்கள், ஆசிரியர்கள் போன்றோரைச் சாரும். ஆத்மீகத்தோடு கூடிய கல்வியை பாரம்பரியமாக பேணுகின்ற பாடசாலையாக இந்து ஆரம்ப பாடசாலை விளங்குவது யாவரும் அறிந்ததே. இன்று இந்தப் பாடசாலையின் மகத்தான வளர்ச்சிக்கு மூலவேராக விளங்குபவர் திரு ஞானகாந்தன் அதிபர் என்றால் அதனை அனைவரும் ஒப்புக் கொள்வர். திருமுறைகளைத் தானே நன்றாகப் பாடி பாடசாலை விழாக்களைத் தலைமை தாங்கும் பாணி தனித்துமானது. இவரது நம்பிக்கை வீண்போகாத நிலையில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடசாலைப் பெறுபேறுகள் ஆண்டு தோறும் பெருவளர்ச்சி கண்டு வருகிறது. பாடசாலை விழாக்களின் போது ஆன்மீகப் பெரியவர்களை அழைத்து ஒவ்வொரு மாணவர்களும் பெரியவர்களது பாதம் பணிந்து ஆசிர்வாதம் பெறுவதற்கு அதிபர் வழிகாட்டி வருகிறார். இத்தகைய முன்மாதிரியான பணிகளை நிறைவேற்றி வருவதனால் எமது பாடசாலை உயர் நிலையை அடைகிறது என பத்திரிகையில் அவர் வழங்கிய செவ்வி பலருக்கு முன்மாதிரியாக அமைகிறது. நவீன கணனி அறைமுதல் பல்வேறு புதுமைகளுடன் பாடசாலை புதுப் பொலிவு பெறுகிறது. தரம் ஒன்றில் தமது பிள்ளைகள் இப் பாடசாலையில் சேர வேண்டுமென தாய் தந்தையர் ஆதங்கத்தோடு காத்திருக்கின்றனர். நூற்றாண்டு விழாக் கண்ட இப் பாடசாலை என்றும் தனது தனித்துவத்தை பெருமையைக் காக்க வேண்டுமென வாழ்த்துகின்றோம்.

-ஆசிரியர்-

❋❋❋ ❋❋❋ ❋❋❋

# துர்க்காபுரம் மகளிர் இல்லம்

## இருபத்தைந்து ஆண்டுகள் நிறைவு

# வெள்ளி விழா

காலம் :- **10-03-2007 சனிக்கிழமை காலை 9-00 மணி**

இடம் :- **அன்னபூரணி மண்டபம்**

தலைவர் :- **சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி** J.P **அவர்கள்**

வரவேற்புரை :- **செஞ்சொற் செல்வர். திரு. ஆறு திருமுருகன் அவர்கள்**

பிரதம விருந்தினர் :- **உயர் திரு. க. கணேஸ் அவர்கள்**

(அரசாங்க அதிபர், யாழ்ப்பாணம்)

வாழ்த்துரை :- **பேராசிரியர். அ. சண்முகதாஸ் அவர்கள்**

சிறப்புரை :- **கலாநிதி. திருமதி. A.N. கிருஷ்ணவேணி அவர்கள்**

பரிளிப்பு வழங்குபவர் :- **திருமதி. சி. அனந்தசயனன் அவர்கள்**

(அதிபர், யா/ மகாஜனாக் கல்லூரி, தெல்லிப்பழை.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமய சமுதாயச் சிந்தனைகள்

பேரறிஞர் முருகவே பரமநாதன் அவர்கள்

நாடு, மொழி, இனம், மதம் ஆகியன மனிதனுக்குப் பிறப்பின் காரணமாகத் தற்செயலாய் வந்தவை. மனித சமுதாயத்தின் கடவுட்கொள்கை அந்தக் கால கட்டத்தில் கடைப்பிடிக்கப்பட்ட அறிவியலை அடிப்படையாக வைத்தே வகுக்கப்பட்டது. இதை வரலாறு காட்டுகிறது. இந்தப் பூமியிலே ஆத்மா உருவாகிக் கொண்டிருக்கிறது. உலக சமயங்கள் மக்களின் நம்பிக்கையை அடிப்படையாக வைத்து பெரிய பெரிய சாதனைகளை, மாற்றங்களை உருவாக்க காணலாம். இந்தச் சமயம்,சாமி, கோயில் தொடர்பான எல்லாமே நம்பிக்கையை மையமாகக் கொண்டே இயங்குகின்றன. மந்திரமும், தேவும் மருந்தும் திருவருளும் மனிதம் பொய்யென்றாற் பொய், மெய்யென்றால் மெய். கூர்ந்து ஆழமாகச் சிந்திப்பின் சமயங்கட்கு ஓர் வளர்ச்சி இருக்கவே செய்கிறது. சமயங்களுள் உடசமயம் அநந்தம். இந்த வளர்ச்சி வேகத்தை ஊசி மருந்துபோற் பிறரிடத்தே பாய்ச்சுகின்ற கெட்டித்தனமும், சதுரப்பாடும் வெற்றி கொள்ளக் காண்கின்றோம். இஃது நம் அனுபவங்கள். மனிதமோ, மற்ற உயிரினங்களோ உணர்ச்சி வேகம், வீச்சு இன்றி எதையும் சாதிக்க முடியாது. தூக்கணாங்குருவியின் கூடு, பெருங்குழவியின் கூடு, தேனடை, கறையான் புற்று, சிலந்தி வலை இதற்குத் தக்க உதாரணங்களாம். மனிதமும் ஆக்கத்திறன் மிக்க பிறவியே. உயர்ச்சி வேகமின்றி எந்தப் பறவையும் கூட்டைக் கட்டமுடியாது. இதைத் தமிழ் மூதாட்டி பாட்டாகவும் வடித்துள்ளார். இன்றைய விஞ்ஞானயுகம் இதற்கு புறம்பானதன்று.

மக்களைக் கவர்வதற்கு இந்த இயற்கைச் சமயம் கோயில் கட்டமுடியாது. பூசை, புனஸ்காரங்கள், சடங்குகள், திருவிழாக்களுக்கு ஏற்பாடு செய்ய முடியாது. சத்தியத்தையும், அழகையும் பின் தொடர்ந்து செல்லலாம். அதற்கும் கூட உணர்ச்சி வேகம் மிகமிக இன்றியமையாதது. உணர்ந்த மாமுனிவரும் உடம்பரோ டொழிந்தாரும் உணர்வுக்கும் தெரிவரும் பொருள் - இறைவன் என்பர் மணிமொழியார்.

இன்றைய மனித ஆன்மா இமயம் போன்ற பொறுப்புகளை, பழுவைத் தாங்கிக் கொண்டிருக்கிறது. இவ் வாழ்வியலை தோள் கனக்குது சுமை கனக்குது தொல்லை வழிப்பயணம் - நாள் கனக்குது நடை கனக்குது - இது நைந்த வழிப்பயணம் எனப்பாடினார். (தமிழழகன்) வெகு சாதாரணமான மனிதர்களையும் மகோன்னதமான மனிதர்களையும் தீர்க்கதரிசிகளையும் அவதார புருடர்களையும் இம் மண் தந்திருக்கிறது. ஒட்டு மொத்தமாகப் பார்த்தால் இவர்களுக்கு வித்திட்ட இவ்வுலகம் இன்று கையறு நிலையோடும் காட்சி தரக் காணலாம்.

ஆன்மாவின் நலனைப் பேணுவோர் என்றும் எவ்விடத்தும் நேர்மையான மனப்போக்குடன் ஒரேபடித்தரத்திற் கருமம் ஆற்றுகின்றனர். இந்த ஆன்மாவுக்கு எது நலம் பயக்கக் கூடியது என்பதை அறியும் அறிவே உண்மையான அற நெறிப்பண்பு, சிறந்த மனோதர்மமும் தான். செந்நெறியினின்று பிறழ்ந்த கோயில்களை பலரும் குறை கூறியுள்ளனர். இயேசு பிரானும், காந்தி மகானும் அவர்களில் இருவர். கோயிலைத் தழுவிய குடிகளும், குடிகளைத் தழுவிய

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கோயிலும் இன்று மாறுபடுகின்றன. இன்று நமது திருக்கோயில்களுக்கும், நமது சமுதாயத்திற்கும் நெருக்கமான தொடர்பு, உறவுகள் அருகியுள்ளன எனலாம். திருக்கோயில் வணிகக்கூட்டமாய் உண்டியல் நிரப்பும் இடமாய் வளர்வதைத் தவிர்க்க வேண்டும். திருக்கோயில் சுரண்டும் நிறுவனமாய் வளர்வது திருக்கோயிற் தத்துவத்துக்கே முரணானது. அதனால் நாடு நலியும், கேடு விளையும். பொதுமை நெறிக்கு மாறான ஒரு மேலாதிக்கக் குடி கோயிலைச் சார்ந்து தோன்ற அனுமதிக்ககூடாது. பணநிலை தளப்படி இன்றேல் அர்ச்சனைச்சீட்டுத் தேவையில்லை. ஓர் ஏழைக்கெழுத்தறிவித்தல் புண்ணியம் யாவினுங்கோடி என்று பாடியவர் பாரதி. இன்றோ நிலை பெரிதும் மாறிவிட்டது. ஏடு துவக்க சீட்டு. எனவே வணிகமுறை அறவே மாற வேண்டும். வருமானம் சீராக செலவழிக்கப்பட வேண்டும். திருக்கோயிற் பொதுநிதி ஆதாரத்தை வலுப்படுத்தி வளமாக வாழும் வாய்பிழந்தவர்க்கு வாய்ப்பை உருவாக்கி உதவி செய்து அவர்களை உயர்த்த வேண்டும். மக்கள் குடியிருப்பின்றி அவலப்படத் தங்கரதமும், வெள்ளி வாகனமும் தேவையா?. மீண்டும் திருக்கோயிலை மையமாகக் கொண்ட சமுதாயத்தை அமைக்க வேண்டும். நாட்டுக்கு நல்லது திருக்கோயில்கள் - அவை சமுதாயத்தின் மையங்களாய் அமைய வேண்டும் என்கிறார் குன்றக்குடி அடிகளார். திருக்கோயில்கள் தனியார் உடைமையாகவும் மதச் சார்பற்ற துரைத்தன உடைமையாகவும் இருப்பது பொருத்தமன்று என்பது அவர் கருத்து. ஆலயங்கள் சமுதாய மையங்களாய் மாற வேண்டும்.

திருக்கோயில்கள் பரம்பொருளை உணர்த்துவதற்குக் கருவியாகவும், பக்திநெறியைப் பரப்புவதற்குச் சாதனமாகவும் விளங்கி வருகின்றன. வாழ்க்கை என்பது கட்டிமுடிக்கப்பட்டாத மாளிகையன்று. நாழிகை தோறும் உரியோராற் கட்டப்பட்டு வருகின்ற வாழ்வு ஒரு சுமையன்று, குறிக்கோளுடையது. வாழ்க்கைக்குச் சோறு போட்டாற் போதாது. களிப்பும், மகிழ்ச்சியும், அமைதியும், சாந்தி சமாதானமும் தேவை. சமயம் என்பது தத்துவம், ஒரு கொள்கை கோட்பாடு. ஆன்மீக பலம் நிறைந்தது. சைவசமய வாழ்க்கை புனிதமான வாழ்க்கை நெறியே சைவம். சமயம் வாழ்க்கைக்குப் அப்பாற்பட்டதும் அன்று. சான்றோர் வாழ்க்கையினின்று பிறந்தது சமயம். வாழ்க்கை ஒரு கொடை. இந்த வாழ்க்கைக்குரிய வாணாள் முழுவதும் முறையாக வாழ்ந்து முடிப்பது பயன் உடையதாக அமையும். வாழ்க்கையென்ற புனித ஆலயத்தை நாம் சிறந்த கால்கோளிற் கட்டி எழுப்பவேண்டும். அம்மாளிகையைப் பாதுகாப்பதும் நம் தலையாய கடமையாம். தான் வதியும் இல்லத்தை தானே தூக்கிச் செல்லும் நத்தையைப் போல நம் வாழ்வின் வெற்றி தோல்விகளை, இன்ப துன்பங்களை நாமே தூக்கிச் செல்கிறோம்.

வாழ்க்கைத் தேவை, சிந்தனை நலம், புத்தியின் தூய்மை, மன நலம், புலன்களிற் செம்மை, பொறிகளின் தூய்மை, உடல் நலத்திலும், உயிர் நலத்திலும் மிகுந்த மேம்பாட்டு வாழ்க்கை ஆகியன வாழ்வு முன்னேற ஆத்மா பூரண வளர்ச்சி காண வேண்டும். உடம்பை வளர்த்தல், உடம்பின் பயன் பாட்டுத்திறனை வளர்த்தல், மனந்தூய்மையாய் இருப்பதால் மனிதர்களின் பெலத்தை அடைகின்றோம். வாழ்க்கை ஒரு தொடர் போர்க்களம். தீமைகள் மாற்றப்பட்டனவேயன்றி அழிக்கப்படவே இல்லை. கடவுளை நோக்கி பிரார்த்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்யும் நேரத்தில் உங்கள் சுற்றுப்புறத்திலுள்ள அழுக்குகளையும் அகற்றுவோம். (அப்பர் பணி உ+ம் ) கடவுளின் படைப்புகளுக்கு நன்மை செய்யாமல் இவ்வுலகத்தை இயக்கும் கடவுளின் குறிக்கோளுக்கு அரணாக இல்லாமல், அவரை நோக்கிப் பிரார்த்தனை செய்தல் அறியாமையே. உண்மையை மறுத்தல் நாத்திகம்.

நாகரீக வாழ்க்கையென்ற பெயரில் ஏதோ ஒன்றுக்கு ஆசைப்பட்டுக் கொண்டு இப்போது நல்ல வழிகளையும் விட்டு விட்டோம். இத்தனை பிரசாரம் சண்டை பணஉதவி செய்து மற்ற மதத்தினர் நம்மவர்களை இழுத்தாலும் இன்னும் பல கோடி மக்கள் நம்மிடையே இருக்க காரணம் நம்மத்தியில் யாரோ ஒரு மகான் இருக்கிறார். எல்லாச் சமூகப் பணிகளும் இறை பணியிற் கொண்டு சேர்த்தால் தான் நிறைவுள்ளதாகும். ஈசுவரன் சம்பந்தமான பணிக்கே 'திரு' என்ற அடைமொழி கொடுத்து திருப்பணி என்று பெயர் வைக்கிறோம். காஞ்சி மகான் எழுத்தாளர் சனங்களுக்கு பிடித்தமானதை மட்டும் எழுதாமல் அவர்கள் அறிவை, மனதை உயர்த்துகிற விதத்தில் எழுத வேண்டும்.

மதத்தில் விசுவாசம், நம்பிக்கை அதுவும் விசாரணைக்கு உட்படாத விசுவாசம் ஆகும். அறிவுக்கு வரையறை கிடையாது. இதற்கு மேல் அறிவில்லை. இவற்றையே நம்புவோம் என்பதும் அறிவுக்கு பொருந்தாது. அலையாத குட்டை நீரல்ல மரபு. குட்டை நீர் இப்போ ஆலயங்கள் என்பர். நமது கோயில்கள் சமுதாய மையங்களாய் முகிழ்க்க வேண்டும். அதற்குச் சமய மெய்யியல் நோக்கு உதவ வேண்டும். கோயில் பிரசங்கத்திற்கு மாத்திரம் உரியதல்ல. பிரஜாப்பிய பரிபாலனத்துக்கு உரியது. பூசைக்காக உரியதன்று. தட்சனைக்கு உரியதன்று. தாட்சாண்யத்துக்கு உரியது. காஞ்சிப் பெரியவர் கடவுட் கொள்கை, இயற்கை அதீத வாதங்கள் மதத்தை மனித நிறுவனமாகக் கொள்ள வேண்டும். ஐயர் நிறுவனமன்று. குன்றக்குடி அடிகாளார் சமயத் தொடர்பில்லாத அறிவியல் நொண்டியானது அறிவியல் தொடர்பில்லாத சமயம் குருடானது.

ஐன்ஸ்டீன்

சேத்திரம் என்பது ஊரல்ல, நகரல்ல, கிராமமும் கட்டிடமும் அல்ல. எந்த இடத்தில் உன்மனம் அமைதியாய் இருக்கிறதோ அதுவே சேத்திரம். எந்த இடத்தில் உனக்கு நிம்மதி கிட்டுகிறதோ, கிடைக்கிறதோ அதுவே மகாசேத்திரம். எந்த இடத்தில் உனக்கு நிம்மதி கிட்டுகிறதோ அதுவே கோயில். கோயில்கள் உள்ள இடத்தில் நம்முன்னோர்கள் அடக்கமாய் இருந்தார்கள். அதனால் அங்கு போகும் போது நமக்கு நிம்மதி கிடைக்கிறது. ஆனால் நம் மூதாதையர் கோயில்களில்லாத இடத்தில் அமைதி பேணியிருக்கக் கூடும். எனவே வனாந்தரங்களில், எங்கேனும் போகும் போது உனக்கு அமைதி ஏற்பட்டால் அங்கு நின்று அந்த அமைதியை, ஆனந்தத்தை அனுபவித்து வா. இந்த அமைதியை அனுபவிப்பதற்குப் பெயர் தான் ஷேத்திரம் (பாலகுமாரன்)

கடவுள் ஓரிடத்தில் இருந்து படைப்புச் செயலைச் செய்கிறார் என்பது எனக்கு விளங்கவில்லை. கடவுள் தூய அறிவு. அதற்கு இருவித நிலையுண்டு. ஒன்று கடந்த நிலை, மற்றொன்று கலந்த நிலை. முன்னையது பேச்சு, எழுத்துக்களையும் தாண்டி தனித்து நிற்பது. இங்கே பின்னையதே தேவை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இ∴து இன்ப அன்பாக யாண்டும் நீக்கமறக் கலந்து நிறைந்துள்ளது. இந்த நிலைக்கு இறையென்ற பெயர் வழங்குகிறது. இறையாண்டும் இருத்தலையும், இருத்தலையும் உடையது. இவற்றை இயற்கை வாயிலாகத்தான் வினைகளை ஆற்றி வருகிறது. அவ்வினைகளுள் ஒன்று படைப்பு என்பது. படைப்பு என்பது இல்லாதது ஒன்றையே புதிதாய் உண்டு பண்ணுவது அல்ல உள்ள ஒன்றே காரியப்படுவது படைப்பு என்று சொல்லப்படுகிறது. அதற்கு கடவுள் என்றும், அறிவு நிமித்தமாக நிற்றவான் அது கடவுள் படைப்பு என்று வழங்கப்படுகிறது.

திரு வி. க

இந்த அடிப்படையே சைவ சித்தாந்தமாம். சைவம் சிவ சம்பந்தமானது. சிவ சம்பந்தமுடையவர்கள் சைவ சமயிகள். இதைத் தாயுமான சுவாமிகள் என்று நீ அன்று நான் உன்னடிமை அல்லவோ எனப்பாடியுள்ளார். அழியக்கூடிய பொருளை ஆராய்ச்சி செய்வது விஞ்ஞானம். அழிவற்ற ஆத்மாவை ஆராய்ச்சி செய்வது மெய்ஞானம். நாம் கடவுளுடன் பேசினால் பிரார்த்தனை கடவுள் நம்முடன் பேசினால் தியானம் - **விவேகானந்தர்.**

திரு வி. க இது தான் சமயமென்று துல்லியமாய் விளக்குகிறார். படைப்பு நோக்கம் இன்பப் பேற்றைக் குறிக்கொண்டு நிற்பது என்றும் உண்மை. உயிர்கள் துன்பக் கடல் கடந்து இன்பக் கரை ஏறுவது எப்படி? அதற்கொரு நாவாய் வேண்டுமன்றோ. அதுவே சமயம்.

சமயம் என்ற சொல் சமையம் என்ற சொல்லின் திரிபாகும். சமையம் என்னும் சொல் கடமையுணர்ச்சியைக் குறிக்குமென்று ஆங்கில அகராதி கூறுகின்றது. மனிதனைத் தீமையில் இருந்து விடுவித்து, இன்பநிலை அடையச் செய்வது சமையம். மேலும் மனிதனை விலங்குப் பண்பிலிருந்து விடுவித்து மனிதப் பண்பில் வளர்ச்சியுறச் செய்வதே சமயத்தின் குறிக்கோள்.

இந் நோக்கிலே தெய்வங்களை மனிதனே படைத்தானென்ற கோட்பாடு இன்று நேற்றல்ல தொன்று தொட்டே இருந்து வருகிறது.

மனிதன் மகத்தானவன், வேதனையில் இருந்து தடைகளைத் தகர்த்துக் கொண்டு உலகப் பரப்பில் பேரழகுடன் தன்னை நிறுவிக் கொள்ள வேண்டியவன் என்ற கருத்து நமக்கு ஏற்பட்டது. கடவுள் கூட மனிதனின் படைப்புத் தான் கடவுளென்ற பெருவடிவத்திற்குள் கூட மனிதன் தான் தன்னை விரித்து பார்க்கிறான். பெண் என்பவள் மரியாதைக்குரியவள். நிலமும், நீரும் மரியாதைக்குரியவை. உழைப்பும் பகிர்வும் உன்னதமானவை. அன்பில்லாமல் மனித வாழ்க்கை அர்த்தம் பெற முடியாது.

வரலாற்றில் தமிழர் தமிழிலக்கியம் பக் 130 ஆக இறைவன் ஒன்றுதான். நமக்கு அது சிவம். சிவசம்பந்தம் உடையவர் சைவ சமயிகள். கடவுளையும் கோயில்களையும் பெருக்காமற் கலப்படமற்ற சிவநெறியைப் பேணி வாழ்வோமாக.

**எல்லோரும் இன்புற்று இருக்க நினைப்பதுவே**
**அல்லாமல் வேறொன்றறியேன் பராபரமே.**

**- தாயுமானசுவாமிகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செய்யும் தொழிலே தெய்வம்

திரு க. சிவசங்கரநாதன் அவர்கள்
சரசாலை

தமிழகத்தில் உள்ள கிரமங்கள் பலவும் தலச்சிறப்பு மிக்கனவாகும். அந்த வரிசையில் காஞ்சிபுரமும் ஒன்றாகும். அழகிய இந் நகரிலே ஏகாலியர் என்னும் சிவனடியார் ஒருவர் இருந்தார். அவர் ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் தொழில் செய்து வந்தார். சிவனடியார்களின் திருவுள்ளக் குறிப்பை அறிந்து போற்றும் இயல்புடையவராக இருந்ததால் அவரைத் திருக்குறிப்புத்தொண்டர் என்று அழைத்தனர். அவர் சிவனடியார்களுக்கு ஆடைகளைத் தோய்த்து உலர்த்திக் கொடுக்கும் திருத்தொண்டு செய்து வந்தார்.

இவரது தொண்டின் சிறப்பைக் கண்டு இறைவன் திருவருள் புரிய விரும்பினார். மழைக் காலத்தில் ஒரு நாள் சிவபெருமான் சிவனடியார் போல வேடம் தாங்கினார். திருநீறு பூசி மிகவும் அழுக்கான கந்தைத் துணியைக் அணிந்து கொண்டு மெலிந்த மேனியராக மெல்ல மெல்ல நடந்து வந்தார். சிவனடியார் ஒருவர் வருவதை திருக்குறிப்புத்தொண்டர் கண்டார். அவரைக் கண்டதும் மிக்க மகிழ்வு கொண்டார். பணிந்து வணங்கினார். பின்னர் அவரது உள்ளக் குறிப்பை அறிந்தவராக தவசியாரே தங்கள் திருமேனி இளைத்திருப்பதேன். நீங்கள் அணிந்துள்ள ஆடையைத் தாருங்கள். அதில் உள்ள அழுக்கை போக்கித் தருகிறேன் என்றார்.

அதைக் கேட்டதும் சிவனடியார் வேடத்தில் இருந்த சிவபெருமான் நான் அணிந்திருக்கும் ஆடை அழுக்கானது தான். இனிமேல் அணிவதற்கும் தகுதியற்றது தான். ஆனாலும் உடம்பை நடுக்கச் செய்யும் இராக் குளிருக்கு இந்தக் கந்தல் ஆடையைத் தான் நம்பியிருக்கிறேன் என்றார். பின்னர் சூரியன் மறைவதற்கு முன்னதாக இந்த ஆடையை நன்றாகத் தோய்த்து உலர்த்தி தருவீராயின் தருகிறேன் என்றார். உடனே திருக்குறிப்புத்தொண்டரும் அடியேன் காலம் தாழ்த்தாமல் உமது ஆடையை தோய்த்து மாலைப் பொழுதுக்கு முன் கொண்டு வந்து தருகிறேன் என்று கூறி வாங்கிக் கொண்டார். குளக்கரைக்கு சென்றார். கந்தல் ஆடையை தோய்க்க முற்பட்டார். அவ் வேளையில் சிவபெருமானின் திருவருட் சோதனையால் இடிமுழக்கத்துடன் பெருமழை கொட்டத் தொடங்கியது. தொண்டர் செய்வது அறியாது தடுமாறினார்.

மழை விடாது பெய்கிறது. தவசியார் குறிப்பிட்டுக் கூறிய பொழுதும் கழிந்து இராப்பொழுதும் வந்துவிட்டது. சிவனடியாருக்கு என்ன கூறுவேன். என் பணியில் தவறிவிட்டேனே என்று மனம் வருந்தினார். முடிவில் தீவினை புரிந்த் எனக்கு இனிமேல் செய்ய வேண்டியது இது தான் என்று துணிந்து எழுந்து துணிகளை அடித்துக் தோய்க்கும் கல்லில் தனது தலையை மோதினார். உடனே ஒரு கரம் தொண்டனரின் தலையைப் பிடித்து நிறுத்தியது. இடைவிடாமல் பெய்த மழையும் நின்றது. சிவபெருமான் உமையம்மையாருடன் இடப வாகனத்தில் காட்சியளித்து அருளினார். இக்காட்சியைக் கண்டதும் திருக்குறிப்புத்தொண்டர் பேரன்பினால் கை கூப்பி எம்பெருமானை வணங்கினார். அப்போது சிவபெருமான் அவரை நோக்கி உனது நிலையை மூவுலகும் அறியும் படி செய்தோம். நீ நமது உலகை அடைந்து நம்மைப் பிரியாது வாழ்ந்திருப்பாயாக என்று கூறி மறைந்தார்.

திருக்குறிப்புத்தொண்டரும் தன் வாழ் நாள் முழுதும் இத்தொண்டினையே செய்து ஈற்றில் இறையடி சேர்ந்தார். இவர் வரலாறு மூலம் செய்யுந் தொழிலே தெய்வம் என்பதை சகலரும் உணர முடியும். திருஞானசம்பந்தர்க்கும் இவருக்கும் சிவபெருமான் உமாதேவியாருடன் காட்சி கொடுத்தருளிய பெருமை இருவருக்கும் உரியது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவை செய்து இன்புற்று வாழ்வோம்

கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம் அவர்கள்

இவ்வுலகில் மனிதர்களுக்கோ, பிற உயிர்களுக்கோ செய்கின்ற சேவை, இறைவனுக்குச் செய்கின்ற சேவையாகின்றது. இறைவன் அங்கிங்கெனாதபடி எங்கும், எல்லா உயிர்களிலும், நிறைந்து உள்ளமையினால், மேற்கூறிய கூற்றுக்கு எதிர்க் கருத்து இருக்கமுடியாது. சமயச் சார்பில்லாதவர்கள் கூட, பிறருக்குச் சேவை செய்வதைத் தமது தலையாய தார்மீக, மனிதக் கடமையாகவே கொள்கினறனர். மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவரும், எந்தச் சமயத்தைச் சார்ந்திருப்பினும் சரி, சமயம் சாராதிருப்பினும் சரி, மனித சேவையைப் புறக்கணிப்பவர்கள் மனிதாபிமானம் அற்றவர்களாகவே கருதப்படுவர். அவர்கள் வாழ்ந்தும் வாழாதவர்களே ஆவார். சமயச் சார்புள்ளவர்கள், சேவையை ஆன்மீகச் சாதனையாகக் கொள்கின்றனர். மனிதரில் இறைவனைத் தரிசிக்கின்றனர். சமயஞ் சாராதவர்கள், சேவையை, மனிதாபிமானச் செயற்பாடகக் கருதுகின்றனர். சேவையில் ஆனந்தம் அடைகின்றனர். சத், சித், ஆனந்தமாக இறைவனைக் காணபவர்கள் சைவ மக்கள் என்பது ஈண்டு நோக்கற் பாலது. அன்பே சிவம் என்பது போன்று ஆனந்தமே சிவம். சேவையில் சிவத்தைக் காண்பதும் சேவையில் ஆனந்தம் காண்பதும் இரு வேறுபட்ட விடயங்கலல்ல என்பதை உணர்ந்து கொண்டால், சேவை ஆன்மிகச் சாதனை என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். ஆன்மிகமும் மனிதமும் ஒன்றிற் கொன்று முரணாவையல்ல. அவை இரண்டும் இணைந்தேயுள்ளன. இணைந்தே இருக்க வேண்டியன.

தமது சேவையைப் பெற்ற ஒருவர் பெரிதும் மகிழ்ச்சி அடைகிறார். அவரின் மகிழ்ச்சியைக் கண்டு, சேவையைச் செய்தவர் அடையும் ஆனந்தத்திற்கு ஈடுஇணையாக வேறு எதனையும் சொல்ல முடியாது. இன்பத்தை அறவழியால் பெறவேண்டும் என்பர் வள்ளுவப் பெருந்தகை. "அறத்தால் வருவதே இன்பம்" என்கிறது வள்ளுவம். பிறருக்குச் சேவை செய்வது அறம் ஆகும். அந்த அறத்தால் பெறப்படுகின்ற இன்பத்திற்குத் தான் ஆனந்தம் என்று பெயர். ஆனந்தம் நிலையான இன்பம். மனிதன் சேவைகளைச் செய்யச் செய்ய ஆனந்த நிலை எய்தப்பெறுகிறான். தெய்வீக நிலைக்குப் படிப்படியாக உயர்ந்து செல்கிறான். மனிதனின் குணங்கள், தெய்வீகக் குணங்களாகப் பரிணாமம் பெறுகின்றன. எல்லோரிலும் கடவுளைக் காண்கிறான். "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை", என்னும் கூற்று, அத்தகைய மனிதனின் வாழ்வில் உண்மை பெறுகிறது. ஆன்மிக வாழ்வில் சேவை செய்தல், ஓர் இன்றியமையாத அங்கம் ஆகும் என்பதை உணர்ந்து கொள்ளுதல் அவசியமாகும்.

சேவை ஊடாக, நாம் எல்லா மனிதர்களிலும், எல்லா உயிகளிலும் மற்றும் எல்லாப் பொருள்களிலும் கடவுளைக் காண்பதற்குக் கற்றுக் கொள்கிறோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் தெய்வீகத்தை, ஆன்மிக விழுமியங்களை வெளிக் கொணர உதவுவது, சேவை. அதன் வழி, இவ்வுலகினை, மனிதர்கள் ஆனந்தமாக வாழத்தகுந்த இடமாக மாற்ற முடிகிறது. மற்றவர்களின் தேவைகளை உணர்ந்து, அவற்றைப் பூர்த்தி செய்ய உதவுபவர்கள், மனிதர்கள் மகிழ்ச்சியாகவும் சாந்தி, சமாதானத்துடனும் வாழ்வதற்கு ஏற்ற இடமாக, இப்பூமியை மலர்ச்சி பெறச் செய்வதற்குப் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்கின்றனர்.

மனிதர்களின் துயர்களைத் துடைத்து, அவர்களின் நலன்களை ஓம்பி, இயற்கைக்கும் அதன் வளங்களுக்கும் பங்கஞ் செய்யாது பாதுகாத்து, எதிர்காலச் சந்ததியினரின் பயன்பாட்டிற்கும் அவ்வளங்களைச் சேமித்து வைத்து, இயற்கையை சீண்டுதலையும், துர்ப்பிரயோகஞ் செய்வதையும் தவிர்த்து, மனித விழுமியங்களைப் பேணி, சமூக நலன்களை ஓம்பி, கடவுளை விசாரித்து, ஒப்புதல் பெற்றுக் கருமங்களை ஆற்றி, எல்லோரும் இன்புற்றிருக்க நினைத்து, அந் நினைவைப் பணி செய்தல் மூலம் நனவாக்கி, பாவ காரியங்களைத் தவிர்த்து, எல்லோருக்கும் நலம் பயக்கும் நன்மை தரும் காரியங்களில் ஈடுபட்டு, அன்பு வழியில், அறநெறியில், அறிவு வழிகாட்டலில், கடவுளின் துணையோடு வாழுகின்ற வாழ்க்கை, ஆன்மிக வாழ்க்கையாகும். ஆன்மிக வாழ்வினை வாழ்தல், உண்மையான கடவுட் சேவையும், கடவுளைச் சேவித்தலும் வழிபடுதலும் ஆகும்.

"நான்", "எனது" என்கின்ற அகந்தை மமதைகளே ஆன்மிக வாழ்வின் எதிரிகள். அவை எம்மிடம் உள்ளதும் எம்மால் பேணப்பட்டு வருவதுமான ஆணவத்தின் முனைப்புக்கள். "உடன் பிறந்தே கொல்லும் வியாதி" என்பர். அவ்வாறு தான் ஆணவமும் ஒரு வியாதி தான். மனம், மொழி, மெய் ஒத்து ஆற்றப்படுகின்ற சேவையினால், இந்த வியாதி தணிக்கப்படுகிறது. ஆணவ முனைப்புக்களின் வீசுரத்தைக் குறைப்பதற்கும் பணிவு, அடக்கம், அமைதி, சாந்தம் போன்ற நற்பண்புகளை வளர்ப்பதற்கும், சேவை எமக்குக் களம் அமைத்துத் தருகிறது.

நாம் செய்கின்ற சேவை, மற்றையோரில் நல்ல மாற்றங்களையும், நற்பண்புகளையும் விருத்தி செய்யலாம், விருத்தி செய்யாமலும் விடலாம். ஆனால் நிச்சயமாக, எம்மில் அதாவது சேவை செய்பவரில் நன் மாற்றங்களையும், நற்பண்புகளையும் அதன் வழி ஆன்மிக விருத்தியையும் உருவாக்கும் என்பது உறுதி. எனவே, நாம், சேவையை ஆன்மிக சாதனையாகக் கொண்டு செயற்படுவதன் மூலம், பணிவுடையன், இன்சொலன் ஆவோம், ஆனந்தம் பெறுவோம். நாமும் நல்வாழ்வு வாழ்ந்து ஏனையோரையும் இன்புற்று வாழ வழிசெய்வோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சிவன் அருட்கதைகள்

மாதாஜி அவர்கள்

## 19. நான்மாடக் கூடலான கதை

வருணன், தனது செயல் வெற்றி தராமல் தோல்வி கண்டமையால், வெட்கம் கொண்டான். பின்னர் கோபம் கொண்டு, சமுத்திரம் நதி யாவும் வற்ற வெகுண்டான். சிவபெருமானின் திருவிளையாடல் அறியதவனாகி சப்த மேகங்களையும் அழைத்து, விரைவில் மதுரையை அழித்து விடுங்களென ஏவினான். அவ்வாறு சப்த மேகங்களும் பூமி தெரியும்படி சமுத்திரம் எல்லா வற்றையும் குடித்தன. அட்ட திக்குகளும் ஒடுங்கும்படி இடி இடித்தன. எட்டுத்திக்கும் மலைகள் முதலாக பூமியும் செவிடுபட இடிமுழக்கம் செய்தன. எட்டுத்திக்கு யானைகள் தங்கள் நிலை தளர்ந்து பூசனிக்காய் போல நசுங்கின. இவ்வாறு யாவும் சிதறி ஓட ஒரே காரிருள் போல இருண்டு காணப்பட்டது. உலக மக்கள் முதலாக பேரூழிக் காற்றெனப் பயந்து திருக் கோயிலினுள்ளே புகுந்து சிவபெருமானின் திருவடியின் கீழ் வீழ்ந்து, "சுவாமி எங்களைக் காத்தருளும்" எனப் பிரார்த்தனை செய்தனர்.

உடனே சிவபெருமான் உயிர்கள் மேலிரங்கி முன் போலவே தமது திருச்சடையிலிருந்து நான்கு மேகங்களை எடுத்து அவைகளை நோக்கி "நீங்கள் மதுரையின் நான்கெல்லையிலும் சென்று நான் மாடங்களாகி, ஏழு மேகங்களையும் நீக்கி விடுங்களென"அருளினார். அவ்வாறே அந்த நான்கு மேகங்களும் நான்கெல்லையிலும் சென்று நான்கு மாடங்களாகி ஒருகுடில் போல நின்றன.

இவ்வாறு மதுரை முழுதும் மேகங்கள் மூடி நிற்றலும், அரசன் முதல் மக்கள் வரை எதுவித இடையூறுமின்றி இருந்தார்கள். சப்த சமுத்திரங்களின் நீரை மேகங்கள் உறிஞ்சிக் கருவுடைய மகளிர் போலக் காணப்பட்டன. இதனால் சமுத்திரங்கள் வறண்டு வற்றி வெட்கமடைந்தன.

இதனைக் கண்ட வருணனும் வெட்கித் தலை குனிந்தான். எனினும் மனதுக்குள் மகிழ்ச்சியடைந்தான். பொற்றாமரை வாவிக்கரையை அடையமுன் அவனுடைய தீராத வயிற்று நோய் அவனை விட்டு நீங்கியது. பின்னர் வாவியில் நீராடி சோமசுந்தரக் கடவுளை வலம் வந்து பூசிக்கக் கருதி உருத்திராக்கம், வீபூதி தரித்துச் சகல அபிடேகத் திரவியங்களால் சோமசுந்தரக் கடவுளை அபிடேகம் செய்து வேதாகம விதிப்படி சகல திரவியங்களையும் கொண்டு பூசனை செய்து ஆயிரத்தெட்டு நாமங்கள் சொல்லி, முத்து இரத்தினம் முதலியன சாத்தி திருவமுது செய்து பிரதட்சனம் செய்தான்.

சிவபெருமான் திருவுளம் மகிழ்ந்து "வருணனே நீ விரும்பியது யாது? சொல்" என்று பணித்தருளினார். வருணன் மகிழ்ந்து எம் பெருமானே தமியேன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்றினாலும் நீங்காத வயிற்று நோயினால் வருந்தி உமது பொற்றாமரை வாவியில் நீராடினேன். அப்பொழுதே என் நோய் நீங்கியது. யாவராலும் அடைய முடியாத பரஞ் சோதியே! அடியேன் அறியாது செய்த பிழையை பொறுத்தருளும் என வேண்டினான். இவ்வாறு பல முறை எம்பெருமானை வாழ்த்தி வணங்கித் தன்னிடத்தை வருணன் அடைந்தான்.

## 20. எல்லாம் வல்ல சித்தரின் கதை

அபிடேக பாண்டியனுக்கும் அவனுடைய நாட்டு மக்களுக்கும் போக மோஷங்கள் கொடுக்க சோமசுந்தரக் கடவுள் திருவுளம் கொண்டார். அதனால் சித்தர் போலக் கடைவீதி, தெரு, மாடமாளிகை இவ்வாறு பல இடங்களும் திரிவார். கிழக்கே செல்வார். மேற்கே காணப்படுவார். இவ்வாறு ஒரு திசை சென்றால் இன்னோர் திசையில் நிற்பார். இன்னொரு சமயம் காணாது போவார். முதியவர்களை இளையோராக்குவார். இளையோரை முதியோராக்குவார். ஆணைப் பெண்ணும், பெண்ணை ஆணுமாக்குவார். கூன், செவிடு, குருடு என்பவைகளை நீக்குவார். வெள்ளி, செப்பு, இரும்பு, ஈயம் என்னும் நான்கு லோகங்களைப் பொன்னாக்குவார். இவ்வாறு பல முரண்பாடுகளை ஒற்றுமையாகவும், பல வேற்றுமையானவற்றை ஒற்றுமையாகவும் செய்வார். கல்வி இல்லாதவர்களுக்கு அவர் மேல் வீபூதி சிதறி கல்விமனாக்குவார். ஒன்றை மற்றொன்றாக்குவார்.

சிவபெருமானின் சித்து விளையாட்டைப் பார்த்தவர்கள் தம்மை மறந்து நிற்பார்கள். சித்தரின் திருவிளையாடல்களை அபிடேக பாண்டிய மன்னன் ஏவலாளர் மூலம் அறிந்தான். சித்தசுவாமியை அழைத்து வரும்படி சிலரை அனுப்பினான். சென்றவர்கள் தாங்களும் சித்தரின் விளையாட்டைப் பார்த்து வந்த காரியத்தை மறந்து விட்டார்கள். மந்திரி மாரைப் பாண்டியன் சித்தர் சுவாமியிடம் அனுப்பினான். மந்திரிமார் சித்தர் சுவாமியிடம் வந்து வணங்கி பாண்டியன் அழைப்பதாக கூறினார்கள். அதற்குச் சித்தர் சுவாமி "எமக்கு அரசனால் எய்தும் பயன் யாது?" என்று மறுத்து விடவே மீண்டும் தூதுவர்கள் சித்தசுவாமி அழைத்தபோது சித்தசுவாமி மறுத்து விட்டார். இதனை மந்திரிகள் அரசனிடம் தெரிவித்தார்கள்.

சர்வலோக நாயகராகிய சிவபெருமானுடைய திருவருளைப் பெற்று இம்மை, மறுமை இன்பங்களை வெறுத்த யோகிகள் இந்திரன், பிரமன், விட்ணு, முதலாயினோரையும் மதியாரே! இப் பூமியை யாளும் அரசனையா மதிப்பர் என்று சொல்லிக் கொண்டிருந்தனன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறுவர் விருந்து:-

# வேலைக்காரப் பெருமான்

அருட்சகோதரி ஜதீஸ்வரி அவர்கள்.

அன்பான பிள்ளைகளே! அன்பு வாழ்த்து! எல்லோரும் நலமாக வாழப் பிரார்த்தனை. நமக்குக் கடவுள் பக்தி மிக அவசியம். பக்தியோடு சரண் அடைபவர்களை இறைவன் தாயை விட அதிக அன்புடன் கவனித்துக் காப்பாற்றுவான். இதை விளக்கும் ஒரு கதையை இப்போது சொல்கிறேன்.

முருகன் கலியுக தெய்வம் என்று சொல்லுவார்கள். கடந்த நூறு ஆண்டுகளுக்குள் நடந்த உண்மையான சம்பவமொன்றை வாரியார் சுவாமிகள் சொல்லியிருக்கிறார். பழனி மலை அடிவாரத்தில் முருகப்பச் செட்டியார் என்ற வணிகர் வாழ்ந்து வந்தார். ஓரளவு நிலபுலமும், வயலும், வர்த்தக நிலையமும் வைத்திருந்தார். பழனி மலையில் குடியிருக்கும் தண்டாயுதபாணியான முருகனிடம் மெய்யன்பு பூண்டவர். நல்ல பல தான தாமம் செய்வார். ஒரு ஏழைச் சிறுவனைத் தனது பிள்ளை போல வளர்த்து வந்தார். ரங்கன் என்பது அவனுடைய பெயர். அவனுக்கென்று தனியாக ஊதியமோ, பொருளோ அவர் வழங்குவதில்லை. பெற்ற பிள்ளையைப் போலவே சர்வ சுதந்திரமும் கொடுத்து வந்தார். அவனும் நன்றாக வளர்ந்து அவருடைய காரியங்களைப் பார்க்கிற அளவிற்கு வந்து விட்டான். முருகப்பச் செட்டியாருக்கு நடுவயது வந்து விட்டது. இளமையில் கஷ்டப்பட்டு வளர்ந்தவர் இப்பொழுது ஓரளவு வளமான நிலையை அடைந்திருந்தார். அப்போது முருகனுடைய ஆறுபடை வீடுகளையும், மருதமலை, போரூர், சிக்கல்,எட்டுக்குடி, எண்கண்,விராலிமலை போன்ற ஏனைய முருகன் தலங்களையும் தரிசித்து வணங்க ஆசைப்பட்டார்.

ஒருநாள் தனது வளர்ப்பு மகனான ரங்கனைக் கூப்பிட்டார். தான் யாத்திரை செய்யப் போவதை அவனிடம் சொன்னார். தான் திரும்பி வர மூன்று மாத காலமாவது செல்லும். ஆதலால் அதுவரை வீட்டையும், வியாபாரத்தையும் கவனிக்கும் பொறுப்பை அவனிடம் ஒப்படைத்தார். பணம், விலையுயர்ந்த நகைகள், ஏனையபொருட்கள் எல்லாம் வைத்திருக்கும் பெட்டகங்களின் திறப்புக்களை அவனிடம் ஒப்படைத்தார்.அடுத்தநாள் கிளம்பிப் போய்விட்டார். இளைஞன் ரங்கன் தன்னிடம் கிடைத்த திறப்புக்களால் எல்லாப் பெட்டகங்களையும் திறந்து பார்த்தான். செட்டியார் வைத்திருந்த பணம், தங்கச் சங்கிலிகள், வைரமோதிரங்கள், கடுக்கண்கள், வெள்ளிப்பாத்திரங்கள் எல்லாவற்றையும் பார்த்தான். இவ்வளவு காலமும் இல்லாத விபரீதமான பேராசை அவனுடைய மனதில் உதித்தது. "ஐயா இவ்வளவு காலமும் எனக்குத் தெரியாமல் ஒளித்துத் தானே வைத்திருந்தார். யாருக்காக வைத்திருந்தாரோ. நான் அவருடைய சொந்தப்பிள்ளை இல்லையே. எனக்கு எப்படித் தருவார்".என்றெல்லாம் யோசித்தான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனதில் பொறாமை ஏற்பட்டது. பொருள்களில் ஒருபகுதியை இப்போதே எடுத்து மறைத்து வைக்க வேண்டும் என நினைத்தான். அப்படி எடுத்தால் ஐயாவுக்கு சந்தேகம் வந்துவிடுமே. எப்படி மறைக்கலாம் என்றெல்லாம் யோசித்தான்.ஆசை அறிவைக் கெடுக்கும் அல்லவா? பல ஊர்களிலும் திருடும் குள்ளன் ஒரு என்ற திருடனை எப்படியோ சினேகிதம் செய்து கொண்டான். குள்ளனுக்கு ரங்கனில் நல்ல விருப்பம் வந்து வந்துவிட்டது. அடிக்கடி வந்து கதைப்பான். ரங்கன் ஒருநாள் குள்ளனிடம் சொன்னான்,"அமாவாசை அன்று இரவு செட்டியார் வீட்டுப்பக்கம் வா அண்ணை. கதவு பெட்டியெல்லாம் திறந்திருக்கும். நீ எடுத்துக் கொண்டு போவதில் ஒரு பங்கை எனக்குக் கொடுத்தால் போதும்." என்று சொல்லி வைத்ததான் அமாவாசை அன்று குள்ளன் வந்துவிட்டான். வாசல்கள், பெட்டகங்கள், எல்லாம் திறந்திருக்கின்றன. ரங்கன் குள்ளனை உள்ளே விட்டுவிட்டு முன்னால் உள்ள கூடத்தில் நித்திரை செய்பவன் போலப் படுத்திருந்தான்.திடீரென்று கையிலே உலக்கை போல பெரிய தடியுடன் முரட்டு இளைஞன் ஒருவன் வாசலில் நின்று,ரங்கா! ரங்கா!"என்று கூப்பிட்டான். திடுக்கிட்டு எழுந்த ரங்கன் உள்ளே ஓடி குள்ளனைப் பார்த்தான்.குள்ளனும் யாரோ வந்துவிட்டார்கள் என்று பயந்து தடுமாறிக் கொண்டிருந்தான். இப்போ என்ன செய்வது? இருவருக்கும் ஒரு யோசனை தோன்றியது. அதன்படி குள்ளன் செட்டியாருடைய பெரிய மெத்தையில் படுத்துக் கொண்டான். ரங்கன் மெத்தையைச் சுருட்டி அதன் மீது போர்வையையும் போட்டுவிட்டு வெளியே போய்ப் பார்த்தான். "என்ன தம்பி நித்திரையா? நான் ஐயாவுடைய ஆள் தான் காலையில் திருச்செந்தூரில் ஐயாவைக் கண்டேன். எனக்கொரு வேலை சொன்னார்".என்று சொல்லிக் கொண்டே உள்ளே வந்தான் அந்த முரட்டிளைஞன். ரங்கனுக்கோ ஒரே உதறல். பேசமுடியாமல் நின்றான். "ஐயாவுடைய படுக்கையில் ஒரே மூட்டைப் பூச்சியாம் தட்டிக் காயவிடச் சொன்னார். நான் இப்போது தான் திரும்பி வந்தேன் நல்லாத் தட்டிவிட்டுப் போகிறேன். நாளைக்கு நீ காயவிடு". என்று சொல்லியபடி அந்த முரட்டு இளைஞன் செட்டியாருடைய மெத்தையை அப்படியே வெளியில் கொண்டு வந்து போட்டான். தான் கொண்டு வந்த தடியினால் மெத்தைச் சுருளை நன்றாக அடித்தான். "ரங்கா நீ நல்ல பிள்ளை. மெத்தையை விரித்துக் காயப்போடு!" என்று சொல்லி விட்டு அங்கிருந்து போய் விட்டார். ரங்கன் மிகுந்த பயத்துடன் மெல்ல மெத்தையை விரித்தான். கள்ளனுக்கு உடம்பெல்லாம் நல்ல அடி நல்லவேளை எலும்புகள் முறியவில்லை. "இன்றைக்கு ஏதோ சகுனப்பிழை இன்னொரு நாள் வா அண்ணை" என்று ரங்கன் கள்ளனை அனுப்பி விட்டான். அவனும் நொண்டிக் கொண்டு போனான். ஒருமாதத்தின் பின் திருடன் மறுபடி ரங்கனைத் தேடிக் கொண்டு வந்துவிட்டான். நேரம் விடியற் காலை மூன்று மணி இருக்கும் இருவரும் திருட்டைப் பற்றிப் பேசிக் கொண்டிருக்கும் போது வெளியிலே ஆட்கள் வரும் சத்தம் கேட்டது. திருடன் ஓடிப்போய் நெல் கொட்டிப் பாதுகாக்கும் பெரிய குதிருக்குள் இறங்கி ஒளித்துக் கொண்டான். ரங்கன் வெளியே போய்ப் பாரத்தான். வாசலிலே மாட்டு வண்டிகள் பல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நின்றிருந்தன.அவற்றில் கோபுரம் போல நெல் மூட்டைகள் அடுக்கி இருந்தன.ஏராளமான ஆட்களும் வந்திருந்தனர். முன்பு வந்த அதே முரட்டு மனிதன் "தம்பி ஐயாவுடைய வயல் நெல் கொண்டு வந்திருக்கிறோம் அடுக்கி விட்டு போவோம்". என்று சொன்னான் மூடைகள் இறக்கப் பட்டன. "முதலிலே குதிரில் கொட்டுங்கள் மிகுதியை அடுக்குவோம் என்றான்" இளைஞன். ஆட்கள் மூடைகளை கொண்டுபோய் குதிரில் அவிழ்த்துக் கொட்டினர். சிலர் அடுக்கினார்கள். அரை மணித்தியாலத்தில் வந்தவர்கள் எல்லோரும் வண்டிகளையும் ஓட்டிக் கொண்டு போய் விட்டார்கள். ரங்கன் ஓடிப்போய் திருடன் ஒளிந்த குதிரைச் சிரமப்பட்டு சரித்து விட்டான். உள்ளே அகப்பட்டிருந்த திருடன் மயங்கிக் கிடந்தான். மயக்கத்தை தெளிவித்து அவனை அனுப்பும் போது நன்றாக விடிந்து விட்டது. செட்டியார் வாசலில் வந்திறங்கினார். வீடு முழுவதும் நெல்லைக் கண்டு விசாரித்தார். ரங்கன் மென்று விழுங்கிய படி "உங்களுடைய ஆள் தான் கொண்டு வந்தார்" என்றான். செட்டியாருக்கு ஒன்றும் புரியவில்லை தீர விசாரித்த பிறகு ரங்கன் உண்மையைச் சொல்லி மன்னிப்புக் கேட்டான். முருகன் தான் இல்லாத போது தன் சொத்துக்களை காத்த கருணையை எண்ணி அழுதார் முருகப்பச் செட்டியார்.

*** *** ***


# சிவபூமி கண்தானச் சபை

**தானங்களில் சிறந்த தானமாக கண் தானத்தைச் செய்ய முன்வாருங்கள்**
**உங்கள் இறப்புக்குப் பின் பார்வையற்று இருக்கும் ஒருவருக்கு**
**ஒளி கொடுக்க நீங்கள் உதவுங்கள். வாழும் போதே**
**இப்புண்ணிய காரியத்துக்கு**
**ஒப்புதல் தாருங்கள்.**

தொடர்புகளுக்கு:
**ஆறு. திருமுருகன்**
தொலைபேசி
**021-222 6550**

கண் வைத்திய நிபுணர்கள்:
**Dr. ச. குகதாசன், 021-222 3645**
**Dr . சிவந்தா, 021-222 3149**
யாழ், போதனா வைத்தியசாலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பே சிவம்

செல்வி அஜந்தினி கனகரட்ணம்

**"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"**

எனும் பொய்யாமொழிக்கிணங்க மறுமைக்கு மட்டுமல்லாமல் இவ்வுலகிலும் இன்பமாக வாழ வழிகாட்டி ஆன்ம ஈடேற்றத்திற்கு வழி நடாத்திச் செல்கிறது இந்து மதம். அன்பையே ஆன்மீக வழியாக போதித்து பாமரனைப் பண்புள்ளவனாகவும் பண்புள்ளவனைத் தெய்வமாகவும் மாற்றும் சாதனமாக திகழ்கிறது இந்துமதம். இறைவனை அன்பே வடிவினராகக் கூறுகிறது. ஆன்மாக்களின் மேல் கொண்ட பேரன்பின் காரணமாகவே இறைவன் ஐந்தொழிகள் புரிவதாக ஆகமங்கள் கூறுகின்றன. வேதங்களும் இறைவனை அன்பு வடிவினன் எனக் கூறுகின்றன. இத்தகைய உண்மையை திருமூலர்

**"அன்பும் சிவமும் இரண்டென்பர் அறிவிலார்
அன்பே சிவமாவ தாரும் அறிகிலார்
அன்பே சிவமாவதாரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருந்தாரே"**

எனக் கூறுவர். அதாவது நாம் எமது அறியாமையினால் அன்பையும் சிவத்தையும் வேறு வேறாக காண்கிறோம். எமக்கு இறைவனை அறியும் மெய்யறிவு கிட்டினால் அன்பையும் சிவத்தையும் பிரித்துப் பார்க்கும் நிலையிலிருந்து விலகி இரண்டையும் ஒன்றாக நோக்கும் பக்குவ நிலையை நாம் எய்துவோம் என்பதையே "அன்பே சிவம்" என்ற அடி மூலம் உணர்த்துகிறார். இங்கே நாம் யாரிடம் வைக்கும் அன்பு சிவமாகும் என்ற கேள்வி எழுகின்றது?

நாம் அனைவருமே அன்புடையவர்கள் தாம். ஆனால் இவ்வுலக வாழ்வுக்காக ஐம்புலன்களின் ஆசைக்குட்பட்டு உலகப் பொருட்களின் மீது பற்று வைக்கின்றோம் அதுபோல் மறுவுலக வாழ்வு உண்டென நம்பி இறைவன் மேல் அன்பு செலுத்துகின்றோம். இதில் எத்தகைய அன்பு எம்மை சிவமாம் தன்னையே எய்த வைக்கும் என்பதை நாம் உணரவேண்டும். இறைவனிடம் மட்டுமல்லாது இறையடியார்களிடமும் ஏனைய பிற உயிர்களிடமும் பற்றற்ற நிலையில் அன்பு செலுத்துகின்றபோது அது சிவமாக மாறுகிறது.

இறைவன் அன்பு மயமானவன் எனவே தான் அவனை "அம்மையே அப்பா ஒப்பிலா மணியே அன்பினில் விளைந்த ஆரமுதே" "இன்பமே என் அன்பே" என்றெல்லாம் பாடிப் பரவுகின்றோம் ஒருநாமம் ஒருருவம் இல்லா ஏகன் இறைவனுக்கு குடும்பம் அமைத்து குழந்தை, மாமன், மச்சான் என்ற உறவு அமைத்து வழிபடுகின்றோம். "பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப் பரிந்து எனப் பரவுவார் மாணிக்க வாசகர். குழந்தை கேட்காமலேயே இந்நேரம் இவனுக்குப் பசிக்கும் என உணர்ந்து பாலூட்டி சீராட்டுகிறாளே அன்னை அவளது அன்புக்கு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிகர் இருக்கமுடியுமா? இறை அன்பை அன்னையின் அன்பினும் மிகுதியாக கூறுகிறார். இத்தகைய அன்பு மயமான இறைவனை அன்பு சிறிதேனும் இன்றி நாம் அடைவது எங்கணம்? நிகரிலா அன்புடைய நிமலனை அன்பின் மூலம் தான் அடையமுடியும். அதனால் தான் இந்துமதம் அனைத்து உயிர்களிடமும் அன்பு கொண்டு தொண்டு செய்யப் பணிக்கிறது. உடம்பிலே உத்தமன் கோயில் கொண்டான் என்கிறார் திருமூலர். ஒவ்வொரு ஆன்மாவின் உடம்பிலும் இறைவன் இருக்கின்றான். எனவே ஆன்மாக்களே நடமாடும் தெய்வங்கள் இந்நடமாடும் தெய்வங்களான இறையடியவர்களை நேசிப்பதன் மூலமே இறைவனை அடையலாம் . இதனால் தான் போலும் சமயக்குரவர்கள் இறையடியார்களை வழிபடும் கடவுளாக கூறியிருக்கிறார்கள் இதனை

**"அங்கமெலாங் குறைந்தழுகு தொழுநோயராய்**
**ஆவுரித்துத் தின்றுழலும் புலையரேனும்**
**கங்கை வார் சடைக்கரந்தார்க் கன்பராகில்**
**அவர் கண்டீர் நாம் வணங்கும் கடவுளரே"**

எனப் பாடினார்கள் தாயுமான சுவாமிகள் இறைவனிடம் வேறெதையும் இறஞ்சவில்லை எல்லா உயிர்களையும் என்னுயிர் போல் எண்ணி அன்பு செலுத்தும் பேறை அளிப்பாயாக என வேண்டுகிறார்.

இறைவழிபாட்டாலும் உயிர்பலி இடுவதாலும், புறவேள்விச் சடங்குகளாலும் மட்டுமே இறைவனை அடைந்து விட முடியாது. இறையடிக்கும் இன்றியமையாதது அன்பு வயப்பட்டு திகழ்வதே என்பதை திருமூலர்

**"என்பே விறகா இறைச்சி அறுத்திட்டுப்**
**பொன் போல் கனலில் பொரிய வறுப்பினும்**
**அன்போடு உருகி அகம் குழைவார்க்கு அன்றி**
**என் போன் மணியினை எய்த ஒண்ணாதே"**

என்கிறார். புராணங்கள் அன்பின் மூலம் இறையடி பெற்றவர்களை கூறுகிறது கண்ணப்ப நாயனார் இறைவன் கண்ணிலிருந்து உதிரம் வடிவதைக் கண்டு தனது கண்ணையே அகழ்ந்து அதில் அப்பவில்லையா? இதுவல்லோ பேரன்பு சிவனடியார்கள் அன்புவடிவானவர்கள். சமய குரவர்கள் பல அற்புதங்களை செய்தார்களென்றால் அவர்கள் பிற உயிர்களிடம் கொண்ட அன்பின் காரணமாகவே அவற்றை செய்தார்கள் அதனால்தான் இன்றும் வழிபடும் தெய்வங்களாக ஆலயங்களிலே வழிபடப் படுகிறார்கள்

இறையடியவர்களிடம் மட்டுமல்லாது மனிதன் உள்ளிட்ட அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்துவதுதான் இறை அன்பாகும். இதனை

**"எவ்வுயிரும் நீங்காதுறையும் இறை சிவன் என்று**
**எவ்வுயிர்க்கும் அன்பாயிரு"**

**"எவ்வுயிரும் பராபரன் சந்நிதியாகும் - இலங்குஉயிர்**
**உடலனைத்தும் ஈசன் கோயில்"**

என்ற பாடலடிகள் உணர்த்து கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு தனக்கென வாழாது பிறர்க்கென வாழும் அன்பின் வெளிப்பாடுகளாக பசித்தோர்க்கு உணவளித்தலும், தான தர்மங்களும், வீதிகள்தோறும் தண்ணீர்ப் பந்தல் அமைத்தலும் விளங்குகின்றன. திருமூலர் அனைவராலும் இயலக்கூடிய அன்பின் செயல்களாக

"யாவர்க்குமாம் இறைவர்க் கொரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக் கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போதொரு கைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க் கின்னுரை தானே"

என்பவற்றைக் கூறுகிறார். இவ்வாறு இறைவனிடம் மட்டுமல்லாது அனைத்து உயிர்களிடமும் அன்பு கொண்டு தொண்டு செய்யும் மனப் பக்குவம் எம்மிடம் இருக்கின்றதா? இன்று நாட்டில் வன்முறைகள் பெருகிக் கொண்டு வருகின்றன காரணம் எம்மிடம் அன்பு இல்லாமையே. எமது உள்ளத்தில் அன்பிருந்தால் அனைத்து உயிர்களிடமும் அன்பு செலுத்தும் பக்குவம் இருக்கும். எமது வாழ்வு துன்பம் நிறைந்து அமைதியற்றதாக அமைந்துள்ளது இதனால் அமைதியைத் தேடி இறைவனை நாடுகின்றோம். புற வழிபாடுகள் மூலம் இறைவனை அடைய முடியும் என நினைக்கின்றோம். ஆனால் உள்ளத்தில் அன்பில்லாமல் அன்பு வடிவான இறைவனை எங்ஙனம் அடைய முடியும்? "தேடிக் கண்டு கொண்டேன் திருமாலொடு நான் முகனும் தேடிதேடொனாத் தேவனை என்னுள்ளே தேடிக் கண்டு கொண்டேன்" என்கிறார் அப்பர் சுவாமிகள் எல்லா இடத்திலும் தேடி கடைசியில் தன்குள்ளே இறைவனைக் கண்டதாக கூறுகிறார். இறைவனை நாமும் காண வேண்டுமானால் எமது உள்ளத்தில் அன்பு, இருந்தால் அங்கே இறைவனைக் காணலாம் அன்பின் விளைவாக நாம் செய்யும் செயல்கள் அனைத்திலுமே சிவத்தைக் காணலாம் ஆகவே அன்பே சிவம் என உணர்ந்து அன்பு நிறைந்தவர்களாக இறைவனிடமும் அனைத்துயிர்களிடமும் அன்பு செலுத்தி வாழும் வழியாக அன்பையே சாதனமாகக் கொண்டு சிவப்பேறு எய்துவோமாக.


## உங்கள் அபிமான "அருள் ஒளி" கிடைக்கும் இடங்கள்

அலுவலகம்:
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.

ஸ்ரீ துர்க்காதேவி மணிமண்டபம்,
கோவில் வீதி,
நல்லூர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மகிமை மிகுந்த மாசிமகம் (கடலாட்டு)

கலாநிதி. செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

'இம்மை, மறுமை, வீடு என்னும் மூவகைப் பயனையும் மக்கட்குத் தருவது தவமே' என்பது உயர்ந்தோர் கண்ட உண்மை. மறுமையும் வீடுமேயன்றி இம்மைப் பயனும் தவத்தால் அடையத்தக்கதே என்பதை, "இலர் பல்ராகிய காரணம் நோற்பார் - சிலர், பலர் நோவா தவர்" என்றும் "வேண்டிய வேண்டியாங்கு எய்தலால் செய்தவம் - ஈண்டு முயலப்படும்", என்றும் "ஒன்னார்த் தெறலும் உவந்தாரை ஆக்கலும் - எண்ணின் தவத்தான் வரும்" என்னும் போந்த அருமைத் திருக்குறள்கள் இனிது விளக்கும்.

இத்தகைய தவச் செயல்களில் நீராடுதல் முதலாவது என்பதை நாலிரு வழக்கின் தாபதப் பக்கத்துள், நீர் பலகால் மூழ்குதலை முதற்கண் வைத்துக் கூறுவதிலிருந்து நன்குணரலாம். "மனத்தது மாசாக மாண்டார் நீராடி - மறைந் மாந்தர் பலர்" என்ற திருக்குறளும், தவத்தால் மாட்சிமைப் பட்டார்க்கு அம்மாட்சிமையை எடுத்துக் காட்டுவது நீர் பலகால் மூழ்குதலே என்பதனை வலியுறுத்துகின்றது. திருமுருகாற்றுப்படையுள் நுனியில் காட்சி முனிவரது இயல்பினை விளக்கும் நக்கீரர் வாய்மை முதலியவற்றால் அவர்கள் மாசற்ற உள்ளத்தினராதல் போலவே, உடம்பும் நீர்பலகால் மூழ்குதலால் மாசற்று விளங்குபவர் என்பதை "மாசற இமைக்கும் உருவினர்" என்பதனால் தெரிவிக்கின்றார். இவற்றால் தவத்தோர்க்கு முதற்கண் இன்றியமையாது வேண்டப்படுவது நீராட்டு என்பது உறுதிப்படும்.

உடம்பின் மாசினை நீக்குவதோடு உயிரின் மாசாகிய பாவத்தைப் போக்கும் தெய்வத்தன்மை பொருந்திய ஆறுகளும் குளங்களும் "தீர்த்தம்" எனப் பெயர் பெற்று விளங்குதல் கண்கூடு. தீர்த்தங்கள் புறத்தூய்மை, அகத்தூய்மை இரண்டினையும் ஒருங்கே தருதலால், அவற்றில் சென்று மூழ்கிப் பயன் பெறுதல் மக்கட்குப் இன்றியமையாததாம். தீர்த்தங்களில் உள்ள நீர் அகத்தூய்மை, புறத்தூய்மை இரண்டினையும் தருதல் நோக்கி நாவுக்கரசர் இறைவனது திருவருளை 'தீர்த்த நீர்' என்றே சிறப்பிக்கின்றார். "அத்தா உன் அடியேனை அன்பால் ஆர்த்தாய் - அருள் நோக்கில் தீர்த்த நீராட்டிக் கொண்டாய்"என்பது அவ்வரிய பகுதி. மாணிக்கவாசகர் "ஆர்த்த பிறவித் துயர்கெட நாம் ஆர்த்தாடும் தீர்த்தன்" என்று இறைவனையே தீர்த்தமாகக் கூறுகின்றார். இதனுள் அவர் தண்ணீர் தூய்மையைத் தருவதன்றி, வெப்பத்தைப் போக்கிப் குளிர்ச்சியைத் தந்து இன்புறுத்துவதைக் குறிப்பிடுதல் கூர்ந்து நோக்கத்தக்கது. தண்ணீர் உடல் வெம்மையைப் போக்குவது. ஆனால் இறைவன் திருவருள் உயிர் வெம்மையாகிய பிறவி வெப்பத்தைப் போக்குவது என்றும் அதனால் தண்ணீரில் மூழ்குவோரது மகிழ்ச்சியை விட மிக்க மகிழ்ச்சியை இறைவன் திருவருளில் மூழ்குவோர் பெறுவார் என்பதையும் அவர் அத் திருமொழியில் குறித்திருத்தலைக் காண்கிறோம். இறைவன் திருவருள் பிறவி வெப்பத்தை போக்குவதாயின் அத்திருவருள் வடிவமாய் இலங்கும் தீர்த்தங்களும் அத்தகையனவே, என்பது சொல்ல வேண்டா. இது பற்றியே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரியோர்கள் தீர்த்த யாத்திரையைச் சிறப்பாக விதித்திருக்கிறார்கள். 'பிரம்மோற்சவம்' அல்லது மகோற்சவம் எனப்படும் பெருவிழாவின் முடிவில் இறைவன் தீர்த்த விழாக் கொள்வதும், மற்றும் சில சிறப்பு நாட்களில் தீர்த்தங்களுக்கு எழுந்தருளி தீர்த்தம் வழங்குவதும் தீர்த்தங்களின் சிறப்பை மக்களுக்கு உணர்த்தி அவர்களுக்கு நலம் புரிதல் பொருட்டே என்பது தெளிவாகும்.

தீர்த்த விழாக்களில் சிறந்த மாசி மகத் திருவிழா அண்மையில் அளவற்ற சிறப்புடன் நிகழ்ந்தமையும் அதன்கண் எண்ணற்ற மக்கள் கலந்து கொண்டு மாசி மகத் தீர்த்தம் ஆடிப் பயன் பெற்றமையும் அனைவர் உள்ளங்களிலும் இன்னும் அகலாது இருப்பதாகும்.

பன்னிரண்டு ஆண்டிற்கு ஒரு முறை வருவதாகிய மகா மகமாயினும் ஆண்டு தோறும் வரும் மாசி மாதத்து மக நாளும் நீராட்டு விழாவிற்குரியதாகும்.

உலகில் ஆறுகளும், குளங்களும் பல இருப்பினும் அவற்றுள் தீர்த்தமாகச் சிறந்து விளங்குவன சிலவே. ஆயினும் ஆறு, குளம் முதலிய அனைத்து நீர் நிலைகட்கும் முதலாயுள்ளது கடலின் ஆதலின் அ஼்து எங்கு இருப்பினும் தீர்த்தமாகவே விளங்கும். இக்கடலாட்டுப் பற்பல சிறப்புக் காலங்களில் நிகழ்வதாயினும் இறைவனுக்குக் கடலாட்டு விழா நாளாக உள்ளது மாசி மாதத்து மக நாளே என்பது ஞானசம்பந்தரது நல்லருள் வாக்கால் விளங்குகிறது.

ஞானசம்பந்தர் திருமயிலையில் அங்கம் பூம்பாவை செய்த பொழுது மண்ணினிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும் அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல் கண்ணினால் அவர் நல் விழாப் பொலிவு கண்டு ஆர்தல் என்பவற்றைப் பல திருப்பாடல்களால் அருளிச் செய்யுமிடத்து ஐப்பசி ஓண விழா முதலாக மாதந் தோறும் நடை பெறும் சிவபெருமானது திருவிழாக்களை முறையாக அருளிச் செய்தார். அத் திருப்பாடல்களுள் 'மாசி மாத விழா கடலாட்டு விழா' என அருளுகின்றார்.

"மடலார்ந்த தெங்கின் மயிலை ஆர் மாசிக்
கடலாட்டுக் கண்டான் கபாலீச்சரம் அமர்ந்தான்
ஆடல் ஆனேறூரும் அடிகள் அடிபரவி
நடம் ஆடல் காணாத போதியோ பூம்பாவாய்"

என்னும் அத்திருப்பாடலால், சிவபெருமான் மாசி மாதத்தில் கடலாட்டு விழாக் கொள்வதும் அதனை மக்கள் கண்டு வணங்கித் தாமும் கடலாட்டுச் செய்து பயன் பெறுதல் இன்றியமையாதது என்பதும் இனிது விளங்குவனவாம்.

திருஞானசம்பந்தர் அருளிச் செய்த திருப்பாட்டின் வழி மாசிக் கடலாட்டுத் திங்கள் இதுவாதலும் இதன் கண் மகத் திருநாளும் இம்மாதத்தில் வருவதும் அன்பர் அறிந்த மகிழ்தற்குரியன. அந்நாளில் அருள் நீராட விரும்பும் அடியவர் அனைவரும் அரன் திருவருளை நினைந்து ஆழ்கடல் நீராடி அனைத்துப் பயனும் எய்துவார்களாக .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எண் சாண் உடம்பில் எத்தனை ஆச்சரியம்!

பொ. ம. ராசமணி பாளையங்கோட்டை.

## 51வது அருள்ஒளி தொடர்ச்சி

எட்டுச் சாணில் பாதி அதாவது அரைப்பாகம் நான்கு சாண். நாம் நிற்கும் போது பாதம் தொடங்கி இடுப்பு வரை நான்கு சாண் உயரத்தில் உள்ள பகுதியை நாம் அரை அல்லது இடுப்பு என்கிறோம். எட்டில் நான்கு அரைதானே! அரையில் தான் வேட்டி கட்டுகிறோம். அங்கே கட்டப்படும் கயிறு அரை நாண் கயிறு எனப்படுகிறது.

பாதம் தொடங்கி கால் மூட்டுவரை இரண்டு சாண் நீளமே உண்டு. எட்டில் இரண்டு கால் பாகம் ஆகவே பாதத்திலிருந்து மூட்டுவரை உள்ள பகுதியே கால் காலுக்கும் அதாவது கால் மூட்டுக்கும் இடைக்கும் இடைப்பட்ட பகுதியே தொடை உடம்பிலிருந்து தொடங்கு இரண்டு சாண் உள்ள பகுதியே தொடை. தொடுத்திருப்பது தொடை.

முழம் என்றொரு அளவு உண்டு கை மூட்டு முனைக்கும் நடு விரல் முனைக்கும் ஒரு முழம். இரண்டு சாண் ஒரு முழம். இதில் ஓர் அதிசயம் ஐந்து விரல்களின் மொத்த நீளந்தான் ஒரு முழம்.

மேலும் பெருவிரலின் அடிப்பாகத்தின் சுற்றளவை இரண்டு மடங்கினால் அது கடிகாரம் கட்டும் மணிக்கட்டின் ஒரு சுற்று ஆகும். நம் கை விரல்களை மடக்கினால், ஓங்கிக் குத்தத் தயாராவது போல கை விரல்கள் மடக்கப்பட்டிருந்தால் அது தான் விரலை மடக்கியவனின் இருதய அளவு, கையளவு இதயத்தில் தான் கடலளவு எவ்வளவு ஆசைகள். முகத்தில் கண்ணின் நீளமே மூக்கின் நீளம். மூக்கின் நீளமே தாடையின் நீளம். தாடைக்கும் கழுத்திற்கும் இடைத்தூரம் அதுவே! முகத்தோடு காது இணைந்துள்ள அளவே வாயின் அளவாகும்.

காதிலுள்ள சோணை அளவிற்கே அறிவின் விசாலம் உண்டு. புத்தி உள்ளவர் புத்தர். புத்தரின் காதுச் சோணை பெரிது. நமது கோவில் நிலைகளிலும் அறிவாளிகளைக் குறிக்க பெரிய சோணை உள்ள காதுகளை அமைப்பார்கள். காதுச் சோணை சிறிதாக உள்ளவர்கள் நிதானமாகச் சிந்திக்க மாட்டார்கள். அடிதடியில் ஈடுபடும் கோபக்காரர்கள், கொலைகாரர்கள். இவர்களில் பெரும்பாலோர்க்கு காதுச் சோணை மிகவும் சிறிதாக இருக்கும்.

சரியாகப் படிப்பு வராத பிள்ளைகளின் காதை ஆசிரியைகள் பிடித்து சிறிது திருகி அதன் சோணையை பெரிதாக்குவார்கள். பாட்டிமார் பிள்ளைகளைக் குளிப்பாட்டும் போது மூக்கை இழுத்து விட்டு மூக்கைக் கூர்மையாக்குவது போல் தான் இதுவும். தன் பிள்ளையின் காதினை டீச்சர் திருகி விட்டார்கள் என்று பெற்றோர் கோபப்படுவதில் நியாயமில்லை. கோப நரம்பு மூக்கில் அதிகமாக உள்ளது. கோபம் வந்தால் உதடு துடிக்கும். கண் சிவக்கும். மூக்கு விடைக்கும். இவை கோபத்தின் மெய்பாடுகள் என்று தொல்காப்பியமே கூறும்.

கோபம் கொண்டு திமிறி நிற்கும் காளை மாட்டை அடக்குவதற்காக உழவர்கள் அதற்கு மூக்கணாங் கயிறு மாட்டுவார்கள். மூக்கணாங் கயிறு போடப்பட்ட மாடுகள் தான் ஏரில் பூட்டி உழ உதவும். வண்டி இழுக்கும். செக்கில் சுற்றி வரும். மூக்கணாங் கயிறு போட மூக்குக் குத்தப்படுவதால் கோப நரம்புகள் அறுபட்டு காளை மாடுகள் சாதுவாகிறது. இதே போல மூக்குக் குத்தப்பட்ட பெண்கள் மிகவும் பொறுமையுள்ளவர்களாக இருப்பார்கள். மூக்குக் குத்தாத பெண்களிடம் அவ்வளவு பொறுமையை எதிர்பார்க்க முடியாது. இது பல கணவர்களின் அனுபவம். நமது முன்னோர்கள் தான் எவ்வளவு புத்திசாலிகள் அவர்களை எண்ணி நாம் தாராளமாகப் பெருமைப்படலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அருள்கவி சி.விநாசித்தம்பி ஐயா அவர்களின் முதலாவது ஆண்டு நினைவு வைபவம்
அளவெட்டியில் சிறப்பாக நடைபெற்றது.
அருட்கவி ஐயாவின் உருவச்சிலையை யாழ் பல்கலைக்கழக
உபவேந்தர் பேராசிரியர் இ.குமாரவடிவேல் திறந்து வைத்தார்.



சைவவித்தியாவிருத்திச் சங்கத்தின் கிளை
நிறுவனமாக இணுவிலில் அமைக்கப்பட்டுவரும்
சைவச்சிறுவர் நிறைவாழ்வு இல்லத்தின்
மாடிக்கட்டிடத்தின் கீழ்த்தள வேலைகள்
பூர்த்தியாகியுள்ளன.








அகில இலங்கை இந்துமாமன்றம் யாழ்
குடாநாட்டிலுள்ள புற்றுநோயாளர்களுக்கு இலவசமாக

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அகில இலங்கை இந்து மாமன்றம்
யாழ் குடாநாட்டில் தமது பணிகளை நிறைவேற்றுவதற்காக அமைக்கப்பட்டு வரும்
நவீன கட்டிடத்தின் சில பகுதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org